மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : வட ஆற்காடு சர்வோதய சங்கம் நிலக் கிரயம் கொடுக்க இசைந்தால் வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு வட்டம், இசையனூர் கிராமத்தில் 1·56 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்ய வேண்டும் என்ற சங்கத்தின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த சர்வோதய சங்கமானது பொதுமக்களுக்கு நன்மை செய்கிற ஒரு இயக்கமாக, கிராமப்புறத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிற காரணத்தால், அவர்களிடத்தில் பணம் பெறுமலேயே கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா, மற்றும் பல வசதிகளை அவர்கள் கேட்கிறார்கள். அதையும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தச் சங்கம் ஆண்டொன்றுக்கு ரூ. 7 லட்சத்திற்கு வியாபாரம் செய்கிறது. வியாபார நோக்கத்தோடு இருக்கிற காரணத்தால் அந்த நிலத்தை இலவச மாகக் கொடுப்பதற்கு இல்லை.

ஸ்ரீரங்கத்திற்குப் பதிலாக திருவரங்கம்.

*167 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஸ்ரீரங்கம் என்று வழங்கப்பட்டு வரும் ஊரின் பெயரை தூய தமிழில் "திருவரங்கம்" என மாற்றி அமைத்திட அரசு முயற்சிகள் மேற்கொண்டதா ?

(இ) ஆம் எனில், அதன் முடிவுகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசின் ஒப்புதலைப் பெறவிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பொதுவாகவே தமிழகத் திலுள்ள வடமொழியில் அழைக்கப்படும் ஊர்களை, அதற்கு முன்னால் ஆங்காங்கு அவைகள் தமிழ் மொழியில் அழைக்கப்பட்டு வந்த முறையில் மாற்றியமைக்க அரசு ஆவன செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரர்களே, தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம் சில ஊர்களின் பெயர்களை தமிழ் மொழியில் மாற்றம் செய்ய வேண்டுமென்று அரசுக்கு ஆலோசனை தெரிவித்தது. அந்த ஆலோசனையை அரசு ஏற்றுக்கொண்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி இருக்கிறோம். ஒப்புதல் வந்தவுடன் மாற்றப்படும்.

Manufacture of gas cylinders.

*168 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a gas cylinder manufacturing unit in this State; and

(*b*) if so, the details of the same?